1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலல்லாவிட்ட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வலல்லாவிட்ட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் அடிப்படையின் கீழ் நிதிக்கூற்றுக்கள் இலங்கை நாணயத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் 03 ஆம் அத்தியாயத்தின் 3.14(இ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் எந்த மூலத்தில் இருந்து நிதி கிடைத்தது என தெளிவாக காணும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் அண்டின் போது நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தில் இனங்காணப்பட்ட மூலதன மாணியம் ரூபா 1,289,543 மிகையில் இருந்து கழிப்பதற்குப் பதிலாக சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டதுடன்	மேற்படி	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
	வட்டி வருமானம் ரூபா 298,181 குறைப்பதற்குப் பதிலாக ரூபா 249,699 சேர்க்கப்பட்டிருந்தது.		
(இ)	நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் 6.20 பந்தியின் பிரகாரம் சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான நிறுவனம் பயன்படுத்திய பெறுமானத் தேய்வு முறைமை முறை மற்றும் பெறுமானத் தேய்வு விகிதம் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு முறை மற்றும் கணனி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு வீதம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2019 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற நிலுவை சந்தை வாடகை ரூபா 51,871 பெற வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்படாமையினால் நிதிக்கூற்றுக்களில் மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்காக வருமானத்தில் இனங்காண வேண்டிய மூலதன மானியப் பெறுமதி சபை வழங்கிய தகவல்களின் பிரகாரம் ரூபா 10,850,022 ஆக இருக்க வேண்டிய போதிலும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 1,289,543 ஆக காண்பிக்கப்பட்டதுடன் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மூலதன மாணியப் பெறுவனவுகளில் பெறுமானத் தேய்வு செயற்பாடுகளின் பெறுமதிக்கு சமமான அளவு ஒன்று வருமானத்தில் இனங்காணப்பட்டிருக்க வில்லை.	மூலதன மானியப் பெறுவனவு பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன மானியங்கள் சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும்.
(இ)	2020 ஆம் ஆண்டு முதல் மூலதன மாணியப் பெறுவனவுகளுக்கு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமையினால் நிதிக்கூற்றுக்களில் ஆண்டின் இறுதியில் சரியான மூலதன மாணியப் பெறுமதி மீதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

(ஈ)	மீளாய்வாண்டிற்காக கட்டிடம், மோட்டார் வாகனம், இயந்திரம், கணனி மற்றும் மூலப் புத்தகங்களுக்காக வருடாந்த பெறுமானத் தேய்வின் கூட்டுத்தொகை ரூபா 231,745 குறைத்தும், தளபாடங்களின் பெறுமானத் தேய்வு ரூபா 4,094 அதிகரித்தும் கணிப்பிடப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களின் மிகை மற்றும் நிலையான சொத்துக்களின் தேறிய ரீதியில் ரூபா 227,651 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	உரிய சரி செய்தல்களை மேற்கொண்டு எதிர் வரும் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும்.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(உ)	2020 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய இலக்கம் பீடீ/2/தி.சுற்/2020 என்ற உள்ளூராட்சித் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன மானிய செலவினங்கள் குறித்துரைத்த படிவத்தில் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	சபைக்கு சொந்தமாக பாலப் படகு ஒன்று மாத்திரம் காணப்பட்ட போதும் மோட்டார் வாகனத்தின் கீழ் ரூபா 7,900,000 ஆக கட்டிடத்தின் கீழ் ரூபா 6,000,000 ஆக பாலப் படகு பெறுமதி இரண்டு காண்பித்து முறையே 5 சதவீதம் மற்றும் 2.5 சதவீதம் படி வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.	அச்சிடல் வழுவாக இருந்ததுடன் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 06 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும், அவற்றுக்கு உரிய பட்டோலைகள் / பேரேடுகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே இணக்கம் செய்யப்படாத ரூபா 1,583,856 வேறுபாடு இனங்கண்டு சரி செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அச்சிடல் வழுக்கள் மற்றும் தவறவிடல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாடுகளுக்குரிய காரணங்களைக் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 சனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	பதவியணியியனரின் பயிற்சியினையும் உள்ளடக்கிய மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டிற்காக மனித வள அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரித்து அமுல் படுத்தப்படுகின்றது.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,964,007 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 13,572,596 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	1,974,121	1,974,887	1,608,024	366,864	1,973,760	1,974,003	1,576,976	1,082,402
ii.	வாடகை	7,873,989	8,088,389	7,610,807	477,582	8,279,090	6,696,958	6,127,950	586,618
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,110,000	1,451,137	1,441,198	9,940	276,500	408,752	406,752	2,000
iv.	ஏனைய வருமானம்	50,000	108,679	108,679	-	581,000	941,070	923,130	17,940
		11,008,110	11,623,092	10,768,708	854,386	11,110,350	10,020,783	9,034,808	1,688,960

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 1,026,023 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் 536,432 அதாவது 52 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடமாடும் நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிலுவை ஆதனவரி தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஒரு ஆண்டுக்கு குறைந்த நிலுவை ஆதனவரி அலகுகள் 567 இல் இருந்து ரூபா 67,143 தொகையும், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ஆதனவரி அலகுகள் 213 இல் இருந்து ரூபா 92,895 தொகையும், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே நிலுவை ஆதனவரி அலகுகள் 135 இல் இருந்து ரூபா 152,481 தொகையும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் நிலுவை ஆதனவரி அலகுகள் 54 இல் இருந்து ரூபா 108,663 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரி அலகுகள் 52 இல் இருந்து ரூபா 211,722 உம் காணப்பட்டது.	மேற்படி	மேற்படி
(iii)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 63,034 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 60,725 அதாவது 96 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அறவிட முடியாத 32 ஆதனங்களுக்கு உரியதாக பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்கு தேவையான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றது.	மேற்படி
(ஆ)	**ஏனைய வருமானம்**		
	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,369,715 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,031,585 ஆகும்	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2022 ஆம் ஆண்டில் தலைவருக்கு கையளிக்கப்பட்ட ரூபா 751,884 பெறுமதியான கணனி துணைப் பாகங்கள் 2022 ஆம் ஆண்டின் போது அழிவடைந்து இருந்தது. இது தொடர்பாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளிலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நட்டத்தை திர்மாணித்து அதற்கு பொறுப்பு வாய்ந்தவரை தீர்மானிப்பதற்காக விசாரணைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	நியமிக்கப்பட்ட குழு உரிய பணிகளை நிறைவேற்றுவதை நிராகரித்திருந்தது.	தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டம் அறவிடப்படல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மாட்டிறைச்சிக் கடை வாடகை நிலுவை ரூபா 56,637 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படாது இருந்ததுடன் அந்த ஆண்டில் இருந்து கடை மீண்டும் கேள்வி கோரப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	இது தொடர்பாக முன்னாள் சேவையாற்றிய செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து மீண்டும் கடை கேள்வி கோரப்படல் வேண்டும்.
(ஆ)	2024 மார்ச் 22 ஆந் திகதிய எல்ஜீடீ/10எப்/02கேஏஎல்/2024 என்ற பதிற்கடமை உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டில் இருந்து கொண்டுவரப்படுகின்ற சந்தை வாடகை நிலுவை ரூபா 51,872 இனை வாடகையாளர்களிடம் இருந்தேனும் அறவிடப்படாமைக்காக பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் இருந்து அறவிட்டு சபை நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் இறுதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	பணத்தை அறவிடுதல் விரைவாக மேற்கொள்ளப்படும்.	தொடர்புடைய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2015 மார்ச் 06 ஆந் திகதி உள்ளுராட்சி அமைச்சில் இருந்து நன்கொடையாக சபைக்கு கிடைத்த ரூபா 1,600,000 பெறுமதியான கம்டெக்டர் அத்திகதியில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டிருந்தது.	அந்த வண்டியை செயற்படுத்துவதற்கு வசதியீனமான நிலையில் காணப்படுகின்றமையாலும் ஏனைய சபையினால் பெற்றுக் கொள்வதில் இருந்து நிராகரிக்கப்பட்டதன் அடிப்படையிலும் அலுவலகத்தில் விளைவற்றுக் காணப்படுகின்றது.	சொத்துக்கள் தொடர்பா பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபைக்குச் சொந்தமான கெப் வண்டி ஒன்று 04 வருடங்களில் இருந்தும், ஜீ.சீ.பீ இயந்திரம் ஒன்று, மேலும் 02 டெக்டர் வண்டிகள் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்தும் பழுது பார்க்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது.	வாகனத்தை பராமரிப்பதற்கு நிதியேற்பாடு கிடைத்த உடன் ஓட்டத்திற்கு பொருத்தமான நிலையில் கொண்டு வந்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வாகனத்தை பழுது பார்த்து பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	சபையினால் பயன்படுத்தப் படுகின்ற 02 கெப் வண்டிகள் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	சபையின் பெயருக்கு கையேற்பதற்கு தேவையான நவடிக்கைகள் மேற்கொள்ளப்பகின்றது.	சபையின் பெயருக்கு கையேற்றல் வேண்டும்.
(இ)	சபைக்கு உரிய 18 மயான நிலங்கள் சபைக் கையேற்கப் படிருக்கவில்லை.	வருடாந்த மெய்மையாய்வு முடிவடைந்த உடன் மாயான நிலங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் கையேற்கப்படல் வேண்டும்.
(ஈ)	சபைக்குரிய 16 சனசமூக மண்டபங்கள் காணப்பட்ட போதும் 05 சனசமூக மண்டபங்கள் மாத்திரம் கட்டிடப் பதிவேட்டில் பெறுமதியுடன் காண்பிக்கப்பட்டிருந்தது.	சொத்துக்கள் பதிவேட்டை நாளது வரையாக்கி எதிர் காலத்தில் சரி செய்யப்படும்.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களை சரியாக இனங்கண்டு பதிவேடுகளை நாளது வரையாக்குதல் வேண்டும்.
(உ)	சனசமூக மண்டபங்களை திருத்துதவற்காக ரூபா 8,733,205 செலவிடப்பட்டிருந்த போதிலும்	நிரந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரை	சனசமூக சபையை ஸ்தாபித்து சனசமூக மண்டபங்களை பராமரித்து

அதன் பராமரிப்பு நடவடிக்கைகளை கையளிப்பதற்கு சனசமூக சபை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் ஸ்தாபிக்கப்படாமையினால் அந்த செலவினம் சிக்கமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.	பெற்ற பின்னர் சனசமூக சபையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அந்த சபைக்கு கையளித்தல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2012, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 54,539 கூட்டுத்தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்க வில்லை.	எதிர் காலத்தில் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பல்நோக்கு அடிப்படையின் கீழ் 2023 யூன் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த வேலை கள தொழிலாளர் இருவர் 2023 யூலை 13 ஆந் திகதி முதல் வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டு சேவையாற்றுவதுடன் மீளாய்வாண்டில் சம்பளமாக ஒருவருக்கு ரூபா 579,600 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 1,159,200 செலுத்தப்பட்டிருந்தது.	சம்பளம் செலுத்துவதற்கான செலவான தொகை மீளளிப்புச் செய்யப்படும்.	சபை நடவடிக்கைகளில் ஈடுபடாத ஊழியர்களுக்காக சபையில் இருந்து சம்பளம் செலுத்தாது இருந்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 ஆம் ஆண்டிற்காக 02 விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 600,000 மொத்த நிதியேற்பாட்டுத் தொகையும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.	நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் காணப்படாமையினால் நிதியேற்பாடு தொகை சேமிக்கப்பட்டிருந்தது.	தேவையின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்காக 04 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 400,000 முதல் ரூபா 1,075,000 வரையிலான வீச்சில் கூட்டுமொத்தமாக ரூபா 3,893,000 நிதியேற்பாடு 79 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையிலான அளவில் சேமிக்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றோம்.	மேற்படி

4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் 12 ஆம் இலக்கத்தின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி உபாய வழிகள் தயாரித்து அதன் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான செயற்பாடுகள் மற்றும் குறிகாட்டிகள் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	தற்போது நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	நிலைபேறான அபிவிருத்தி உபாய வழிகளைத் தயாரித்து அதன் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான செயற்பாடுகள் மற்றும் குறிகாட்டிகள் தயாரிக்கப்படல் வேண்டும்.